## தலைப்பு 317 – வடமத்திய மாகாண சபை

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்புகள்

### 1.1 தூரநோக்கு

வளமான மாகாணம்

### 1.2 பணிக்கூற்று

நிலைபேறானதும் சீரானதும் முழுமையானதுமான அபிவிருத்தி நுழைவொன்றின் மூலம் மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னுரிமையாகக் கொண்ட தேசிய அபிவிருத்திக்கு நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் பங்களித்தல்.

### 1.3 பணிப்பொறுப்புகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

2020 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 20,967.19 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 20,963.12 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாகாண சபைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் சேமிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,949.13 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2020.12.31 இல் உள்ளவாறானது | | சேமிப்பு |
|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மீண்டெழுபவை | 19,329.00 | 19,329.00 | - |
| மூலதனம் | 1,638.19 | 1,634.12 | 4.07 |
| **மொத்தம்** | **20,967.19** | **20,963.12** | **4.07** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.